# இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

லங்கா சமசமாஜக் கட்சியின் மூன்று அமைச்சர்களையும் செப்டம்பம் 2ம் திகதி வெளியேற்றியதன் மூலம் கூட்டு முன்னணியைச் சிதைத்துவிட்டதுபற்றிப் பல்வேறு அரசியல் கட்சிகளும், கோஷ்டிகளும் பலதரப்பட்ட கருத்துகளை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன. முன்னாள் நிதியமைச்சரும், சமசமாஜக் கட்சியின் தலைவருமான கலாநிதி என். எம். பெரேரா, தனது தேர்தல் தொகுதியான எட்டியாந்தோட்டையில் நடந்த கூட்டமொன்றில் கலநதுகொள்வதற்காகக் கொழும்பிலிருந்து புறப்பட்டுச் செல்லும்போது நடுவழியே ''இடதுசாரி முன்னணி மூலம் உண்மையான சோஷலிஸ இலங்கை உதயமாகட்டும்'' என்று பொதுஜனங்கள் கோஷமிட்டார்களெனச் செப்டம்பர் 8ம் திகதி ல. ச. ச.க.வின் பத்திரிகை 'ஜனதின' இதழில் செய்தியொன்று வெளிவந்தது.

ஸ்ரீ. ல. சு. க. தலைமையின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சமசமாஜக் கட்சியும் கூட்டு முன்னணி அரசாங்கத்துக்குள் புகுந்து செயல்பட்ட பின்னர் கடந்த ஐந்தாண்டு காலத்துக்குள் உண்மையான சோஷலிஸ இலங்கை உதயமாகும் பாதைநோக்கி ஓரங்குலமேனும் நாம் அடியெடுத்து வைக்கவில்லையென்பதைக் கூற வேண்டியதில்லை.

இந்த இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோலக் கடந்த 5 வருடங்களுக்குள் சமசமாஜக கட்சியும் அரசாங்கத்துக்குள் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடமும் பங்குகொண்ட ஸ்ரீ. ல. சு. கட்சியின் தலைமையில் நடாத்திச் செல்லப்பட்ட அரசாங்கம் 1971-ல் இளம் உயிர்களையும், தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமையையும், மானிட ஜனநாயக உரிமைகளையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டதே இலங்கைச் சமுதாயத்துக்குச் செய்த சேவையாகும்.

அரசாங்கம் தொடர்பாக ஆதிக்கம் செலுத்தும் சில முதலாளித்துவ பகுதியினரின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றி வைக்கும் ''டெயிலி நியூஸ்'' பத்திரிகை செப்டம்பர் 8ம் திகதிய இதழில் தீட்டிய தலையங்கம் கூறியதென்ன? கடந்த ஐந்து ஆண்டுகளிலும் அதிகரித்து வந்த சகல பொருளாதார நெருக்கடிகளுக்கும் சமசமாஜக் கட்சி அரசாங்கத்துக்குள் இருந்ததுதான் காரணமென்று அது குறிப்பிட்டது. அதிலும் விசேடமாகக் கலாநிதி என். எம். பெரோரா நிதியமைச்சர் பதவிலிருந்ததுதான் என்றும் கூறியுள்ளது.

ஸ்ரீ. ல. சு. கவைப் போன்ற முதலாளித்துவக் கட்சியான ஐ. தே. கவும் வைத்திருக்கும் கருத்தும் இதுவே. ஸ்ரீ. ல. சு. கவின் தலைமைப் பீடம் கலாநிதி என். எம். பெரேராவின் வேலைத் திட்டங்களுக்கு உடன்பட்டிருந்தது என்பதையும் ஸ்ரீ. ல. சு. கவின் தலைமைப் பீடத்தின் சகல செயல் திட்டங்களையும் ல. ச. ச. கவின் தலைமைப்பீடம் (தாங்கள் வெளியேற்றப்பட்டதைத் தவிர) ஏற்றுக்கொண்டிருந்தது என்பதையும் இரு சாராரும் கூறவில்லை. இவர்கள் யாவரும் ஒன்றுபட்டு முதலாளித்துவ அமைப்பின் கீழ் ஆட்சியை நடத்திச் சென்றதினால் தொழிலாளர் வர்க்கத்தையும் உட்படுத்திய வெகுஜனங்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டனர் என்பதையும் அவர்கள் கூறவில்லை.

ஜனதின பத்திரிகையின் செப்டம்பர் 8ம் திகதிய இதழில் ''லங்கா சமசமாஜக் கட்சி வெகுஜனங்களுக்கு உண்மையைக் கூறியிருக்கிறது'' என்று கலாநிதி பெரேரா கூறியிருந்தாலும், மேற்கூறப்பட்ட உண்மையை முதலாளித்துவ அரசாங்கத்திலிருந்து ல. ச. ச. கட்சித் தலைவர்கள் வெளியேற்றப்பட்ட பின்னருங் கூடக் கூறுவார்களா என்பது சந்தேகத்துக்குரியதே. அவ்வாறு அவர்கள் கூறினால் கூட்டு முனனணி அரசாங்கத்துக்குள் ஸ்ரீ. ல. சு. க. வின் தலைமையின் கீழ் முதலாளித்துவ முறையைப் பாதுகாக்கும் பணியையே அவர்கள் செய்தார்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியேற்படும்.

சமசமாஜ 'ஜனசத்திய' பத்திரிகையின் 7ம் திகதிய இதழில் ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டிருந்ததாவது:-

''சகல இடதுசாரிப் பகுதிகளும் ஒன்றுபட்டுச் சக்திவாய்ந்த இடதுசாரி முன்னணியொன்றை கட்டியெழுப்பினால் மாத்திரமே இப் பயங்கரமான நிலைமையில் நாட்டையும், வெகுஜனங்களையும் பாதுகாக்க முடியும்''

''ஜனதின'' பத்திரிகையின் செப்டம்பர் 8ம் திகதிய ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு எழுதியது:-

''சகல முற்போக்குச் சக்திகளும் ஒன்றுபடுவதன் மூலம் மாத்திரமே பிற்போக்குத்தனத்துக்கு முகம் கொடுக்க முடியும்'' இது வெறும் வீண்பேச்சு. இப்படிக் கூறுவது எல்லா நோய்களையும் ஒரே மருந்தினால் குணமாக்கி விடமுடியும் என்பதைப் போலாகும்.

தொழிலாள வர்க்கத்தைத் தலைமையாகக் கொண்ட வறுமையால் வாடும் வெகுஜனங்கள் தெளிவான புரட்சிகரத் தலைமையின் கீழ் உண்மையான இடதுசாரி இயக்கத்தின் மூலம்

(மூன்றாம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் தலையங்கம்

மக்களின் இரத்தத்தையும், கண்ணீரையும், மூச்சையும் பலியிட்டு நடாத்திச் செல்லப்பட்ட முதலாளித்துவ 'கூட்டு' முன்னணி, தொழிலாளர் வர்க்கத்தையும் உட்படுத்திய வெகுஜனங்களின் கண்ணீர் சிந்தாமலே சிதைந்து விட்டது.

லங்கா சமசமாஜக் கட்சி, ஜனாதிபதியின் கடிதத்தினால் வெளியேற்றப்பட்ட பின்னர் தேசியப் பேரவையில் வெளியிட்ட அறிக்கையில், கூட்டணியை உடைத்தது பிரதமரே என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி என். எம். பெரேராவும் மற்றைய இரு அமைச்சர்களும் குறிப்பிட்டிருந்தனர். அதில் உண்மையுண்டு. அந்த உடைத்தெறியும் பணியைப் பிரதமர் சூழ்ச்சி செய்து நிறைவேற்றி விட்டார், என்று லங்கா சமசமாஜக் கட்சியின் பத்திரிகை 'ஜனதின' கூறுகிறது.


# ஆரம்பம்

மலர் 1 | செப்டம்பர் 1975. — விலை: 25 சதம் | இதழ்: 5


ஆம்! அதுவும் உண்மைதான். 1964—ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் அவர்கள் உடன்படிக்கை செய்து 10 ஆண்டுகள் கழிந்த பின்னரே உண்மையைக் கூறவேண்டி நேர்ந்துள்ளது. அதுவும் உண்மையை உரைப்பதை விட வேறுவழியில்லாமல் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

லங்கா சமசமாஜக் கட்சி வெளியேற்றப்பட்டதுடன் முடிவடைந்த கடிதப் பரிமாற்றத்தின்போது பரிமாறப்பட்ட அப்பேர்பெற்ற முதலாவது கடிதத்தில் ஆயுதப் போராட்டம், பாட்டாளி வர்க்கப் புரட்சி சம்பந்தமாக சமசமாஜக் கட்சி வைத்திருநத நம்பிக்கைகளைக் கைவிட்டு விட்டதாகப் பிரதமர் கூறியிருந்தார். அது சமசமாஜக் கட்சியினால் கூறிக்கொள்ள முடியாத உண்மையே. எனினும் பிரதமர் தலைமையில் இயங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் முழு உண்மையைக் கூறாமலிருக்க வழியொன்றும் இல்லாததாலேயே அவ்வாறு கூறுகிறது.

கூட்டணி சிதைந்ததற்கு சமசமாஜக் கட்சிதான் பொறுப்பென்று கொழும்பில் நடைபெற்ற தமது கட்சியின் கூட்டமொன்றில் பிரதமர் வலியுறுத்தியிருந்தார். அது உண்மையல்ல. முன்னணியை உடைக்கும் அவசியம் தமக்கிருந்திருந்தால் கலாநிதி பெரேரா தாழ்மையான பதிலை அனுப்பியிருக்கவோ, சமசமாஜக் கட்சியின் அமைச்சர்கள் வெளியேற்றப்படும்வரை பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கவோ மாட்டார்கள்.

கூட்டணியை உடைத்ததன் மூலம் இடதுசாரி மக்களைப் பிரதமர் காட்டிக்கொடுத்துவிட்டாரெனக் கலாநிதி பெரேரா தேசியப் பேரவையில் கூறியிருக்கிறார். இதில் உண்மையுண்டா? பிரதமரோ தான் மார்க்ஸியவாதி என்றோ அல்லது இடதுசாரி என்றோ எக் காலத்திலும் கூறிக்கொள்ளவில்லை. அன்றும் இன்றும் அவர் 'பண்டாரநாயக்கா கொள்கை' களைப் பின்பற்றுவதாகவே கூறிவந்துள்ளார். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் தம்மை மார்க்ஸீயவாதி என்றோ இடதுசாரி என்றோ கூறிக்கொள்ளவில்லை.

என்றாலும் லங்கா சமசமாஜக் கட்சி அவ்வாறில்லை. அதன் தலைவர்கள் தம்மை மார்க்ஸ்—லெனின்—டிராட்ஸ்கி கொள்கைகளைப் பின்பற்றுபவர்களாகக் கூறிக்கொண்டனர். கம்யூனிஸ்ட் கட்சியும் அவ்வாறில்லை. மார்க்ஸ்—லெனின் கொள்கைகளைப் பின்பற்றுவதாகவே அத் தலைவர்கள் கூறினார்கள். சமுதாயப் புரட்சியினால் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கமொன்றை நிலைநாட்டுவதன் மூலம் மட்டுமே சோஷலிசத்தை நோக்கிச் செல்ல முடியுமென்ற மார்க்ஸீய சித்தாந்தத்தை அங்கீகரித்திருப்பதாகக் கூறிய இவர்கள் பின்னர் ''பண்டாரநாயக்கக் கொள்கை'' களை பின்பற்றி சோஷலிசத்தை நோக்கிச் செல்லலாமென்பதை ஏற்றுக்கொண்டு கூட்டு முன்னணியை அமைத்துக்கொண்டனர். இதனைக் கண்ணோக்கும்போது காட்டிக்கொடுத்தது யார்? என்பதும் காட்டிக்கொடுத்திருப்பது யாருக்கு என்பதும் அம்பலமாகிறது.

சமசமாஜக் கட்சியின் ஆங்கிலப் பத்திரிகையான ''நேஷன்'' கூறியபடி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளைக்கொண்ட கூட்டு முன்னணி பாராளுமன்ற அரசியலை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டதாகும். பெரும் சொத்துரிமையாளர்களின் கட்சியை அரசு ஆதிக்கத்திலிருந்து ஒதுக்கி வைக்க வேண்டுமெனில், தொழிலாளர் வர்க்கத்தினதும், சிறு சொத்துரிமையாளர்களினதும் கட்சிகளின் வெகுஜன முன்னணி அவசியமாகும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டே அம்முன்னணி அமைக்கப்பட்டது. இதிலிருந்து ''கூட்டு முன்னணி அமைக்கப்பட்டது, முதலாளித்

2 ம பக்கம் பார்க்க

## ஹோட்டல் ஊழியரையும் அத்தியாவசிய சேவை பாதித்தது

பம்பலப்பிட்டி 'கிறீன்கெபின்' ஹோட்டலில் வேலை நிறுத்தம் செய்த 5± தொழிலாளர்களுக்கு அத்தியாவசிய சேவை கட்டளையின் பிரகாரம் எவ்வித சலுகைகளும் கிடைக்காதென்று தொழில் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

'கிறீன் கெபின்' ஸ்தாபனத்தின் சேவை அத்தியாவசிய சேவை கட்டளையின்கீழ் கொண்டுவரப்பட்டதால் வேலை நிறுத்தம் செய்தோரை வேலையைக் கைவிட்டுச் சென்றவர்களாகக் கருத வேண்டுமென்று ஸ்தாபனத்தின் சார்பில் சட்டத்தரணி சத்தியேந்திரா வாதித்தார்.

அவரின் வாதத்தை நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திர வர்த்தக கைத்தொழில் ஸ்தாபன ஊழியர் சங்கத்தின் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் இயங்குவது) கிறீன்கெபின் கிளைச் செயலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து அங்குள்ள ஏனைய ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

தொழிலாளர் வர்க்க விரோத அரசாங்கத்தின் பிற்போக்கு அத்தியாவசிய சேவை கட்டளையால் இதே அரசாங்கத்தில் அதிகாரம் செலுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் இயங்கும் சங்கத்தைச் சார்ந்த 54 ஊழியர்கள் இன்று வயிற்றில் அடி விழுந்து நடுத்தெருவில் நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்கும்வரை போராடினர்!

உரக் கூட்டுத்தாபனத்தின் ஹுணுப்பிட்டிய ஆலையில் பார வேலைப் பிரிவில் வேலை செய்த வரும், சுரண்டலை எதிர்த்து ஏப்ரல் 22-ம் திகதி முதல் நடாத்தப்பட்டு வரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போராட்ட வீரத் தோழருமான எஸ். சிறிபாலா என்பவர் சில தினங்களுக்கு முன் காலமானார்.

தோழர் சிறிபால உரக் கூட்டுத்தாபனத்தில் 1970-ம் ஆண்டு முதல் சேவை செய்தவர்.

மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான அவருக்கு இறக்கும் போது வயது 26.

முதலாளித்துவ அரசாங்கம் கடைப்பிடிக்கும் செயலால், போராட்டம் நீண்ட காலம் நடைபெற்று வரும் சூழ்நிலையில் குடும்ப சீவியத்தை நடாத்துவதற்காக முத்துராஜவெல சேற்று நிலத்தில் வேலை செய்தமையால் பீடித்த நோய் காரணமாகவே தோழர் சிறிபாலாவின் அகால மரணம் சம்பவித்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

வேலைக்குச் சென்று போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் கருங்காலியாயிருப்பதைவிட சேற்று நிலத்தில் இறங்கிக் கஷ்டமான வேலை செய்து தனது குடும்ப சீவியத்தை நடாத்த அவர் முடிவு செய்து செயல்பட்டார்.

முதலாளித்துவ முறையின் கொடூர சுரண்டலுக்கும், செயல் திட்டங்களுக்கும் தொழிலாள வர்க்கத்தைச் சார்ந்த போராளி ஒருவர் பலியாகிவிட்டார்.

மறைந்துவிட்ட தோழர் சிறிபாலா அவர்களுக்கு தொழிலாளர் வர்க்கத்தின் இறுதி மரியாதையை நாம் செலுத்துகிறோம்.

முத்துராஜவெல சேற்று நிலத்தில் வேலை செய்ததேரில் இது வரை ஏறத்தாழ 100 பேர்கள் அடிக்கடி இவ்வாறு மரணமடைந்திருக்கிறார்களென்று ராகம ஆஸ்பத்திரியிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

கந்தானையைச் சேர்ந்த தோட்டச் சொந்தக்காரர் ஒருவரின் கீழ் முத்துராஜவெல சேற்று நிலப்பகுதி ஒன்றில் வேலைக்குச் சென்ற தோழர் சிறிபால சென்ற ஆகஸ்ட் 8-ம் திகதி நோய்வாய்ப்பட்டு ராகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அவ்வாறே அங்கு வேலை செய்த வேறு சிலரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் இச் செய்தியை எழுதும் நேரத்தில் 13 வது வார்ட்டில் கடுமையான நோயினால் மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கிறார்.

அரசாங்கத்தின் போலி விவசாய இயக்கத்தின் கீழ் முன்பு முத்துராஜவெல சிரமதான வேலையில் ஈடுபட்ட பலர் இம்மாதிரி நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தார்களென்றும் தெரிய வருகிறது.

ஒரு தடவை இவ்வாறு விவசாய மாணவர்கள் 40 பேர்கள் வரை கடுமையான நோயால் பீடிக்கப்பட்டார்களென்று கூறப்படுகிறது.

இந்த நோய் பீடிக்கப்பட்ட பின்னர் சரீரத்தில் முழங்காலுக்குக் கீழ் உணர்வு அற்றுப் போய இயக்கமில்லாது போய் விடுவதுடன் பல சந்தர்ப்பங்களில் அதன் காரணமாகவே மரணமும் சம்பவிக்கிறதென ஆஸ்பத்திரியிலிருந்து கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.

விவசாயத்துக்கு அவசியமாகத் தேவையான உரத்தை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் உழைப்பைக் கேவலமான வகையில் சுரண்டுவது பற்றி மௌனம் சாதிக்கும் முதலாளித்துவ அரசாங்கம், விவசாய வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிறவர்கள் முத்துராஜவெலயில் இவ்வாறு மரணமடைவதுபற்றி வழமைபோல் மௌனம் சாதிக்கிறது.

# ஐ.எல்.ஓ.வின் பதில்

உத்தேசிக்கப்பட்ட தொழிலாளர் உரிமை சாஸன ஒப்பந்த மசோதா மூலம் ''தொழிற் சங்க உரிமைகள் மீறப்பட்டிருப்பது'' சம்பந்தமாக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் செய்திருந்த 'முறைப்பாடு'' தகுந்த நடவடிக்கைக்காகச் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகப் புதுடில்லியிலுள்ள ஐ. எல். ஓ. பிராந்திய காரியாலயத்திலிருந்து பதில் கிடைத்துள்ளது.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள தொழில் ஒப்பந்த நகல் மசோதாவிலுள்ள படு பிற்போக்குத்தனமையை அம்பலப்படுத்திச் சங்கம் தொழில் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்ட ஸ்தாபனங்களுள் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும் ஒன்றாகும்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் சாஸனத்தில் அடங்கியுள்ள எட்டு மணி நேர வேலை உரிமையை வென்றெடுக்க அன்று தமதுயிரை அர்ப்பணித்த தொழிலாளர்களுக்கு அஞ்சலி செய்யுமுகமாக நடத்தப்படும் மேதினத்தன்று தொழிலாளர் உரிமை சாஸனம் என்ற பெயரில் இலங்கை அரசாங்கம் வெளியிட்ட ஓர் போலிச் சாஸனமான உத்தேசிக்கப்பட்ட தொழிலாளர் சாஸனத்தினால் அந்த எட்டு மணி நேர வேலை உரிமையைப் பறித்துக் கொள்ள முதலாளிகளுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பற்றியும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் எழுதிய கடிதத்தில் ஏனைய விடயங்களுடன் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்போலியான தொழிலாளர் உரிமைச் சாஸன ஒப்பந்த அறிக்கை வெளிவந்து சுமார் ஒன்றரை மாத காலத்தின் பின் இலங்கையின் பிரதமர் ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் கருத்தரங்கில் உரையாற்றியது ''பரிகாசத்திற்குரியது'' என்றும், அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

''எட்டு மணி வேலை நாளைச் சட்ட மூலம் வரையறுக்கும் ஐ. எல். ஓ. சாஸனத்தை ஆதரிக்கும் நாடுகளில் அரசாங்கத்தினால், அந்த உரிமை அவ்வாறு வெளிப்படையாகக் கைவிடப்பட்ட வேறு நாடு ஒன்றாவது இருப்பதரிது'' என்று அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் மகாநாட்டில் லங்கா சமசமாஜக் கட்சியின், தலைமையின் கீழுள்ள இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் சார்பில் பெற்றி வீரகோனும் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திற்குச் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் புதுடில்லிப் பிராந்திய காரியாலயத்திலிருந்து கிடைத்த கடிதத்தின் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம்,<br>
பிராந்தியக் காரியாலயம்,<br>
புதுடில்லி.<br>
7, சார்தார் படேல் மார்க்,<br>
புதுடில்லி—110021.<br>
19.5 ஆகஸ்ட் 8.

அன்புள்ள ஐயா,

இலங்கை அரசாங்கத்தினால் ஆலோசிக்கப்பட்டு வரும் தொழில் ஒப்பந்தம் பற்றிய சட்ட மசோதாவில் தொழிற் சங்க உரிமைகள் மீறப்பட்டிருப்பது தொடர்பான தங்களின் முறைப்பாடு சம்பந்தமாக எழுதப்பட்ட 1975 ஜூலை 28-ம் திகதியிட்ட தங்கள் கடிதத்தை நான் பெற்றுக்கொண்டேன்.

ஐ. எல். ஓ. வின் தலைமையகத்திற்கு இக்கடிதம் தகுந்த நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வண்ணம்,<br>
தங்களின் விசுவாசமுள்ள,<br>
(ஒப்பம்)<br>
செல்வி. இ. ஆர். ப்ரோயிஸ்மன்<br>
பிரதி பணிப்பாளர்.

பொதுக் காரியதரிசி,<br>
இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம்,<br>
இல. 3. 22 வது ஒழுங்கை,<br>
கொள்ளுப்பிட்டி.<br>
கொழும்பு.<br>
இலங்கை.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துவ முறையைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்காகவன்றிச் சோஷலிசத்தை நோக்கிச் செல்வதற்காகவல்ல என்பது மிகத்தெளிவாகிறது சிறுமுதலாளிகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு சோஷலிசத்தை நோக்கிச் செல்ல முடியாது. ஏனென்றால் சிறு முதலாளிகளுக்குள்ளேயே பெரும் முதலாளிகளும் தோன்றி முதலாளித்துவ முறையையே பாதுகாப்பர். அவ்வாறே சுரண்டலும், தொடர்ந்து நடைபெறும். இப்போது நடந்துள்ள சம்பவங்கள் பற்றிய சாராம்சம் இதுவேயாகும்.

சமசமாஜக்கட்சி, தொழிலாள வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்ததிலிருந்து சிறு முதலாளித்துவ சித்தாந்தத்தையும் அடிப்படையையும் கொண்ட கட்சியாகப் படிப்படியாகக் கொள்கையைக் கட்டிக் கொடுப்பதன் மூலம் வளர்ச்சியடைந்து வருவதுடன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினது சில முதலாளித்துவ பகுதிகளையும், சிறு முதலாளிகளையும் அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்பட்டு தடுக்க முடியாத அளவுக்கு நவீன பெரும முதலாளிகளை அடிப்படையாகக் கொண்ட கட்சியாக வளர்ந்து வந்திருக்கிறது. அரசு இயந்திரத்தின் மூன்று முக்கிய பாகங்களான நிதி, கமத்தொழில், போக்குவரத்து ஆகியவற்றைத் தமக்குத் தேவையான வகையில் முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்காகக் கொண்டு நடாத்த அவைகளைப் பெரும முதலாளிகளுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். இதற்காகச் சமசமாஜக் கட்சி அமைச்சர்களின் அமைச்சுகளைக் குறைந்த பட்சம் மாற்றவேண்டியாவது ஏற்பட்டது. இதற்கு உடன்பட்டிருந்தால் தொழிலாளர்களினதும் வெகுஜனங்களினதும் சக்தியில் தங்கியிருக்காது. முதலாளித்துவ அரசு இயந்திரத்தின் பாதுகாக்கும் அதிகார பலத்தில் தங்கியிருக்கும் நிலைக்கு வீழ்ந்திருக்கும் சமசமாஜக் கட்சிக்கு எதையும வலியுறுத்த எவ்வித சக்தியும் இருந்திருக்காது ஆதலினால் அமைச்சரவையைத் திருத்தி அமைக்க சமசமாஜக் கட்சியின் தலைமைப் பீடம் இணங்கமுடியாது போய் விட்டது. அதனால் சமசமாஜக் கட்சி அமைச்சர்களை ஜனாதிபதியின் மூலம் வெளியேற்றிக் கூட்டு முன்னணியை உடைக்க வேண்டியே பிரதமருக்கு ஏற்பட்டது. பாரம்பரிய இடதுசாரி இயக்கத்தை நாசப்படுத்தியும், 1971ல் மனிதக் கொலைகளைச் செய்தும், தொழிலாளர்களின் வர்க்க உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் குழி தோண்டிப் புதைத்தும் சீர்குலைந்து போன இம்முதலாளித்துவ முறையைப் பாதுகாத்துச் செல்வதற்கே இக் கூட்டு முன்னணிக்கு ''இடதுசாரிப்'' போர்வை போர்த்தப்பட்டது. என்பது சமசமாஜக் கட்சிக்கோ, கம்யூனிஸ்ட் கட்சிக்கோ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கோ கூறமுடியாத உண்மையாகும். அந்த மறுக்கமுடியாத உண்மையைத் தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் வறுமையால் வாடும் வெகுஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வுண்மையின் பிரகாரம் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய வேறுவித வலது சாரிக் கூட்டுகளுக்கு முகம் கொடுப்பதற்கும், விடுதலை பெறுவதற்கும் புதிய இடதுசாரி இயக்கமொன்றைக் கட்டியெழுப்புவதைத் தவிரச் செய்யக்கூடிய புத்திசாலித்தனமான வேறு காரியம் ஒன்றுமில்லை.

## உர உற்பத்தி பாதிக்கப்பட்டது

தொழிலாள வர்க்கம் தொடர்பாகத் தாம் கடைப் பிடிக்கும் பிற்போக்கு நடவடிக்கையை மூடி மறைத்து, அதனைத் தொடர்ந்தும் நடாத்திக்கொண்டு செல்வதற்காக இந்த அரசாங்கம் இன்றுவரை 4 மாதங்கள் கடந்துவிட்ட ஹுணுப்பிட்டிய உரக் கூட்டுத்தாபனத் தொழிலாளர்களின் போராட்டம் குறித்து மௌனமாக இருந்தாலும், அதனால் உர உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதென்றும், உரம் கலக்கும் இயந்திர வேலைகள ஸ்தம்பித்துள்ளனவென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கருங்காலிகளாகக் கூட்டுத்தாபனத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட கைத்தொழில் பயிற்சியாளர் 32 பேருக்கும் பயிற்றப்பட்ட வேலை பற்றித் திறமை இல்லாத அதே வேலையில் அவர்கள் அங்கு சென்றிருப்பது தேவையான பயிற்சி அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்காகத்தான் என்றும் கருங்காலிகளைப் பயன்படுத்திக் கலக்கப்பட்ட பெருமளவான உரம் [illegible] என்று [illegible] டுள்ளதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையில் மேலதிக நேர வேலை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதெனவும அறிய முடிகிறது.

இதற்கிடையில் ஈவிரக்கமின்றிச் சுரண்டப்பட்டு வரும் ''நிரந்தரமற்ற'' தொழிலாளர்களின் போராட்டம் உக்கிரமடைந்து வரும் வேளையில் யு. சி. எம். யு. (சமசமாஜ) கிளையிலிருந்து 36 அங்கத்தவர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர்.

## ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின யூனியன் கார்பைட் கிளை அங்கத்தவர் சார்பில் நிர்வாகத்திற்கும் சங்கத்துக்குமிடையே சேவை நிபந்தனைகள் மற்றும் சலுகைகள் தொடர்பான கூட்டு ஒப்பந்தமொன்று அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. இதன் பிரகாரம் முன்னர் வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீண்டும வேலைக்கமர்த்தவும் இணக்கமேற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயம் செய்யும் முறை

## இதுதானா?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் இயங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரச் சேவையாளர் சங்கத்தின் சில உத்தியோகத்தர்களுக்கு துறைமுகக் கூட்டுத்தாபனத்திலிருந்து ரூ. 40,000 வரை கமத்தொழில் அலுவல்களுக்காக வழங்கப்பட்டுச் செலவிடப்பட்டதாம்.

அதனைத் திரும்பப் பெறமுடியாமல் போனதால் இப்போது அதில் ஒரு பகுதியை மாதந்தோறும் அந்தச் சங்கத்தின் அங்கத்தினர்களிடம் வசூலித்து வருவதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட குருணாகலை மாவட்டத்திலுள்ள காணி ஒன்றில் கமத்தொழில் வேலைகளை ஆரம்பிப்பதற்காகக் கூட்டுத்தாபனத்தால் இப்பணம் செலவு செய்யப்பட்டிருக்கிறதென்றும் தெரிய வந்திருக்கிறது.

இச்செலவை ரூ 7,000 ஆகக் குறைத்து வசூலிக்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்தின் கொழும்பு கிளையினால் பணிப்பாளர்களுக்கு ஒரு கடிதத்தின் மூலம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு இரண்டு வருட காலமாக, வார நாட்களிலும், வார விடுமுறைகளிலும் இவ்விவசாயப் பணிக்காக லொறிகளும் மற்றும் தேவையான சகல உபகரணங்களும் கூட்டுத்தாபனத்தால் துறைமுக ஸ்ரீலங்கா சுதந்திரச் சேவையாளர் சங்கத்தின் சில உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்துடன் இப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள், அனுமதி இல்லாமல் மரங்களை வெட்டி விற்பனை செய்தார்களென்றும், சட்ட விரோதமாக மரக்கட்டைகளை வாகனத்தில் ஏற்றியபோது துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான லொறி ஒன்று வன இலாகா அதிகாரிகளால் ஒரு தடவை கைப்பற்றப்பட்டதாகவும், எமது சங்கக் கிளை அனுப்பிய கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களென்றும் தெரிய வந்துள்ளது.

துறைமுக ஸ்ரீலங்கா சுதந்திர சேவையாளர் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்து இந்தக் கமத்தொழிலுக்காகச் செலவு செய்யப்பட்ட நிதியை வசூல் செய்வது சட்ட விரோதமென்று சுட்டிக்காட்டியிருக்கும் நமது சங்கத்தின் துறைமுகக் கிளை, ஸ்ரீலங்கா சங்கத்தின் உறுப்பினர் பலருக்கு இந்த வசூல் எதற்காகச் செய்யப்படுகிறதென்று கூடத் தெரியாது என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறது.

சென்ற ஜூலை மாதம் 8-ம் திகதி எமது கிளையால், இவ் விடயங்களைக் குறிப்பிட்டு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு துறைமுக (கப்பல் சரக்கு) கூட்டுத்தாபன பணிப்பாளர்களிடமிருந்து இது வரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

( 4ம் பக்கத் தொடர்ச்சி )

## நிறுத்தப்பட்ட.......

பிளெண்டர்ஸ் அன் பெக்கர்ஸ் மற்றும் சிலோன் அன் வேர்ல்ட் என்டர் பிரைசஸ் என்ற வேறு இரு ஸ்தாபனங்களுக்கும் அதன் பண்டகசாலையிலிருந்து தேயிலையை அனுப்பியது.

இராஜினாமாச் செய்ய மறுத்த தொழிலாளர்களுள் சிலர், முன்னர் பக்கட் பண்ணிய 'தங்கனா' என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையைப் பக்கெட் பண்ணுவதையும் ஸ்தாபனம் நிறுத்தியது.

இவ் வேலைக்குப் பதிலாக இவ்வூழியர்களுக்குச் சிறு சிறு வேலைகள் வழங்கப்பட்டன. அல்லது வேலை எதுவுமின்றி சும்மா வைக்கப்பட்டனர்.

சங்கம் எடுத்த நடவடிக்கையின் விளைவாகச் சங்கத்தின் கிளை அங்கத்தவர்கள் ஸ்தாபனத்திற்கு வெளியே நடைபாதையில் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் ஆர்ப்பாட்டம் செய்தபோது ஸ்தாபனத்து வளவுக்குள் பணிப்பாளர் சபை கூடியது.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பிப்பதெனவும், 'தங்கனா' தேயிலையைத் தொடர்ந்து பக்கெட் பண்ணுவதெனவும் சபை தீர்மானித்ததாகக் கிளைச் செயலாளருக்குச் செய்தி கிடைத்தது.

இதனை ஸ்தாபனம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியது.

அத்துடன் வெளியாருடன் பிளெண்ட் செய்தல, மற்றும் பக்கெட் பண்ணுதல் தொடர்பாக உடன்படிக்கையைச் செய்வதில்லையென்றும, ஆனால், அத்தகைய வசதிகளைத் தேயிலை ஏற்றுமதி வியாபாரத்திற்கே பயன்படுத்துமெனவும் உறுதிப்படுத்தியது.

இராஜினாமா செய்யுமாறு நிர்வாகத்தினால் தூண்டப்பட்டோருள் பலர் தமது சுயவிருப்பத்தின்பேரில் இராஜினாமா செய்யவில்லை என்றும், அவர்கள் நஷ்ட ஈடு எதுவுமின்றி வேலையினின்றும் ஆட் குறைப்புச் செய்யப்படுவர் என்னும் மிரட்டலினாலேயே உண்மையாகவே அவ்வாறு செய்தனரெனவும் இ. வ. ஊ. சங்கத்திற்கு எழுதியுள்ளார்.

துரதிஷ்டசாலியான இத் தொழிலாளர்கள், தாம் சேர்ந்திருந்த சங்கம் அவர்களது தொழிலை மீண்டும் பெறுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையென்றும் தமது வேலையை மீண்டும் பெறுவதற்குச் சங்கத்தின உதவியைக் கோரியும், இ. வ. ஊ. சங்கத்திற்கு எழுதியுள்ளனர்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

## ஹுனுப்பிட்டி......

பறிக்கப்பட்ட சீவனோபாயத்தை மீண்டும் பெறுவதற்காகவே இப்பொழுது ஹுனுப்பிட்டிப் போராட்டம் நடைபெறுகின்றது.

இத் தொழிலாளர்கள் அனைவரும் ஒரு வருடத்திலிருந்து ஐந்து வருடங்கள்வரை உரக் கூட்டுத்தாபனத்தின் கிரமமான வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களாவர்.

தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும், மீண்டும் வேலையை ஆரம்பிப்பதற்கு ஒழுங்கு செய்யவும் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தெளிவு காண்பதற்கும் பேச்சு வார்த்தைக்கு வருமாறு கேட்டு உரக்கூட்டுத்தாபனத்திற்குப் பொறுப்பான காணி, விவசாய அமைச்சருக்குச் சங்கம் ஜூன் 15ம் திகதி [illegible] பிய கடிதத்திற்கு [illegible] யும் எதுவிதப் பதிலும் இல்லை.

# உறுகுவேயில் அடக்குமுறை

லத்தீன் அமெரிக்காவிலுள்ள உறுகுவே என்ற நாட்டில் எழு அரசாங்க ஊழியர்களை அந்த நாட்டு அரசாங்கம் கைது செய்திருப்பது பற்றி சர்வதேச ரீதியில் கைதிகள் குறித்து நடவடிக்கை எடுக்கும் "அம்னெஸ்டி இண்டர் நேஷனல்" என்று அழைக்கப்படும் ஸ்தாபனத்திலிருந்து கிடைத்த கோரிக்கைக்கிணங்க, இலங்கையில் அடக்குமுறை தொடர்பாக ஆரம்ப காலம் முதல் எதிர்ப்பைக் காட்டி வரும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் கண்டனம் தெரிவிப்பதற்கு தீர்மானித்திருக்கின்றது.

உறுகுவேயில் கைது செய்யப்பட்டிருக்கும் எழு பேர்களும் கடந்த ஜூலை மாதம் 27ம் திகதி கைது செய்யப்பட்டனர். 1973-ம் ஆண்டு ஜூன் மாதம் இராணுவ சதிக்குப் பின்னர் தொழிலாளர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் சிறை வைத்திருக்கும் சிலிண்ட்ரோ மியூனிசிபல் விளையாட்டரங்கில் அவர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சித்ரவதை செய்யப்படலாம் என்ற அச்சமும் இருக்கின்றதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் அடக்குமுறைச் செயல்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடந்து வரும் தொழிற்சங்கப் போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதற்காகத் தொழிற்சங்க அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டது பற்றி இப்போது அங்கு சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கும் தேசிய தொழிற்சங்கத்தால் சென்ற மார்ச் மாதத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டிருப்பவர்களில் பலரை விசாரணை செய்வதற்காகவென்று வேறிடங்களுக்கு கொண்டு சென்று அவர்கள் அங்கு சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றார்கள். கடந்த மேதினக் கொண்டாட்டங்களுக்கு முன் மேலும் பலர் திரள் திரளாகக் கைது செய்யப்பட்டனர். தற்பொழுது நடு முழுவதும் 2000 பேர்கள் வரை கைது செய்யப்பட்டுச் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்களென்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## கூட்டுத்தாபன பிரிவில் புதிய கிளை

மொரபிட்டி, தெருமர வேலைத் திட்டத்தில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் புதிய கிளை ஒன்று சில தினங்களுக்கு முன் அமைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் (மாஸ்கோ சார்பு) தலைமையின் கீழ் இயங்கும் இலங்கை அரசக் கூட்டுத்தாபன சேவையாளர் சங்கத்தின அங்கத்தினர்கள் உட்பட அக் கிளையின் செயலாளரும், அச் சங்கத்திலிருந்து விலகி இப்போது இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

சமசமாஜக் கட்சியின் தலைமையின் கீழ் இயங்கும் ஐக்கிய அரசாங்கக் கூட்டுத்தாபன வர்த்தக ஊழியர் சங்கத்தின் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் [illegible] அங்கத்துவம் பெற்றிருக்கிறார்கள்.

## மலிபன் முதலாளிக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்

மலிபன் ஊழியர்களை வேலை நீக்கம் செய்த தகராறு பற்றி விசாரணை செய்த தொழிற் தகராறு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க மலிபன் முதலாளி நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்காக அவர்மீது வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமென்று தொழில் ஆணையாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் 239 அங்கத்தினருக்கு, ஒவ்வொருவருக்கும் மூன்று வருடச் சம்பளம் என்ற அடிப்படையில, மொத்தமாக வழங்கவேண்டிய ரூ. 8,82,198. 36 தொழில் திணைக்களத்தில் கட்டப்பட்டுள்ளது.

தீர்ப்பின் மற்றொரு பகுதியில் குறிப்பிட்டவாறு இவ்வூழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்காவிட்டால் ஒவ்வொருவருக்கும் மேலும் ரூ 3,000 மேலதிக நஷ்ட ஈடாகவும் வழங்குவதற்கு இதுவரையும் பணம் கட்டப்படவில்லை.

இதனாலேயே மலிபன் முதலாளிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. தீர்ப்பில இரண்டாவது பகுதிக்குரிய பணத்தைச் செலுத்துவதற்கு முதலாளியினால் அவகாசம் கோரப்பட்டபோது தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் தொழிற் தகராறு நீதிமன்றம் விதித்த தீர்ப்பை மாற்றுவதற்குத் தொழில் ஆணையாளருக்கு அதிகாரமில்லையென்று கூறப்பட்டதாகச் சங்கம் தொழிற் திணைக்களத்திலிருந்து அறிந்து கொண்டது.

## மூவருக்கு ஆயுள்காலச் சிறை

குற்றவியல் நீதி ஆணைக் குழுவினால ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி கடுகண்ணாவ சம்பவம் தொடர்பான விசாரணையில் 2வது சந்தேக நபரான கே. ஜெயதிஸ்ஸ, தெனியாய சம்பவம் தொடர்பான விசாரணையில் 84 வது சந்தேக நபரான எம். ஜி. குணபால, 86வது சந்தேக நபரான சுனில் விக்ரம ஆராச்சி ஆகியோருக்கு கடூழியச் சிறைத் தண்டனைஉட்பட ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

(முதலாம பக்கத் தொடர்ச்சி)

முன்னேறிச் செல்வதைத் தவிர வேறு எவ்வித விமோசனப் பாதையும் இல்லை. தற்காலச் சமூக, அரசியல் நிலைமையின் கீழ்; அவசர காலச் சட்டங்களை அகற்றுவதற்காகவும், பொது ஜன பாதுகாப்புச் சட்டம், குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டம் ஆகியவை உட்படச் சகல அடக்குமுறைச் சட்டங்களையும் இரத்துச் செய்வதற்காகவும், வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை நிலைநாட்டுவதற்காகவும், சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்காகவும், ஜனநாயக உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவும், மானிட உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் மற்றும் சகலவிதமான நசுக்குதல்களையும் எதிர்ப்பதற்காகவும் நாம் போராடத் தயாராக இருந்தால் மாத்திரமே உண்மையான இடதுசாரி இயக்கமொன்றில் ஒன்றுபட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பம் ஹுனுப்பிட்டிய

# போராட்டம் தொடர்கிறது

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் புதிதாகச் சேர்ந்த இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றும் நிரந்தரமற்ற தொழிலாளர்களாகக் கூட்டுத்தாபனத்தினால் கருதப்படும் 500க்கும் மேலான தோழர்களின் போராட்டம் கடந்த ஏப்ரல் 22ம் திகதி முதல் இன்னும் தொடர்ந்து நடைபெறுகின்றது.

கூட்டுத்தாபனமோ அல்லது காணி விவசாய அமைச்சரோ இவ்வேலை நிறுத்தத்தைத் தீர்த்து வைப்பதற்கு எந்தவொரு முயற்சியையும் எடுக்கவில்லை.

இதனைத் தீர்த்து வைப்பதற்குப் பதிலாகக் கருங்காலி வேலை செய்வதற்குக் கிரமமாக வேறு தொழிலாளர்களை 'நிரந்தரமற்ற' அடிப்படையிலேயே படிப்படியாக வேலைக்கமர்த்தக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சேமலாப நிதி, மேலதிக நேரச் சம்பளம், மற்றும் சம்பளத்துடனான லீவு, அரசாங்க விடுமுறை முதலிய அடிப்படை உரிமைகளும் இல்லாது மிகவும் கீழான நிலையில் இத்தொழிலாளர்கள் சுரண்டப்படுகின்றனர்.

இந்நிலைமையில் இப்போராட்டத்தைப் பாதுகாப்பது தொழிலாளர் வர்க்கம் முழுவதற்குமே முக்கியத்துவம் உடையதாகும். நாகரீகமடைந்த நாடுகளில், எல்லா ஸ்தாபனங்களிலும் கிரமமாக தொழிலாளர் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகளைக் கிடைக்காது செய்யவே தனிப்பட்ட கொந்தராத்துக்காரர் மூலமோ அல்லது பெயரளவிலான தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மூலமோ வேலைக்கு அமர்த்தப்பட்டு, மிகவும் கேவலமாகச் சுரண்டப்படும் தொழிலாளர்கள் பரந்த அளவில் வேறு அரச கூட்டுத்தாபனங்களிலும் இருக்கிறார்கள்.

இப்போது போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தோழர்களுக்கு உணவுப் பொருட்களாக அல்லது பணமாக உதவியளிக்கச் சகல கிளைகளிடமிருந்தும் நிதி சேகரிக்க வேண்டுமெனச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தமது போராட்டத்தை நடாத்துவதற்காகத் தினமும் ஹுனுப்பிட்டியில் கூடும் தோழர்களுக்கு தேநீரும், மதிய உணவும் தற்போது சங்கத்தினால் தினமும் வழங்கப்பட்டு வருகின்றது.

எமது சங்கத்தைச் சார்ந்த தோழர் ஒருவருக்கும், சமசமாஜக் கட்சித் தலைமையிலான ஐக்கிய கூட்டுத்தாபன வர்த்தக ஊழியர் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவருக்குமிடையில் சண்டை நடைபெற்றதால் எமது அங்கத்தவருக்கு வேலை வழங்குவதற்குக் கூட்டுத்தாபனம் மறுத்தது.

இதனை ஆட்சேபித்தே வேலை நிறுத்தம் ஆரம்பமானது. இப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகம் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாது கருங்காலிகளை வேலைக்கமர்த்தி வந்தது.

இதனால் எமது அங்கத்தவர்கள் ஜூன் 3ம் திகதி கூடி வேலைக்குத் திரும்புவதென்று தீர்மானித்தனர்.

அடுத்த தினம் அவர்கள் வேலைக்குச் சென்றபோது நிர்வாகம், பெயரளவிலான தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வேலைக்கு வருமாறு கூறியது.

தோழர்கள் யாவரும் இதனை ஏற்றுக்கொள்ளாத நிலையில் கூட்டுத்தாபனம் அவர்களுக்கு வேலை வழங்கவில்லை.

கூட்டுத்தாபனத்தின் வாசலுக்கு அண்மையில் கூடிய தொழிலாளர்களை முன்னர் கலைப்பதற்கு முயற்சி செய்த பொலீசார் நிலைமையை விளங்கிக் [illegible] கொண்டபின் [illegible] விலகிக் கொண்டனர். அதன்பின் கூட்டுத்தாபனத்தின் வேலை முகாமையாளர் அங்கு வந்து தொழிலாளர் கூட்டுறவுச் சங்க மூலமாக வேலைக்கு வர வேண்டுமென அரசாங்கம் புதிதாகத் தீர்மானித்துள்ளதாகக் கூறினார்.

இப்புதிய தீர்மானமானது கூட்டுத்தாபனத்தில் கிரமமான வேலையைச் செய்யும் தொழிலாளருக்குரித்தான உரிமைகளை இல்லாது செய்வதற்குக் கையாளப்படும் தந்திரமான நடவடிக்கையே அல்லாது வேறொன்றுமில்லை.

ஐநூறுக்கும் மேலான தொழிலாளர்களிடமிருந்து

( 3ம் பக்கம் பார்க்க )

## நிறுத்தப்பட்ட ஷோவலஸ் தேயிலை வர்த்தகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது

ஷோவலஸ் ஸ்தாபனம் அதன் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்திற்காகத் தேயிலையைப் பிளெண்ட் செய்தல், பக்கட் பண்ணுதல் மற்றும் ஏற்றுமதி செய்தல் போன்ற வேலைகளுக்குக் கொந்தராத்துக்காரர்களை முற்றாகப் பயன்படுத்துவதற்குச் செய்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

அங்கு கடமை புரிந்த 93 உடல் உழைப்புத் தொழிலாளர்களுள் சிறுபான்மையோரான 9 பெண்களும், 3 ஆண்களும் உறுதியாக எடுத்த முடிவும், இவர்கள் சார்பில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் எடுத்த நடவடிக்கையுமே இதற்குக் காரணமாகும்.

சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் எல். டபிள்யு. பண்டிதவின் தலைமையிலான (க. க. மாஸ்கோ) ஐக்கிய தேயிலை றப்பர் தொழிலாளர் சங்கத்தின் நீண்டகால அங்கத்தவர்கள்.

இ. வ. ஊ. ச. தின் ஜனவரி 31ம் திகதிய வேலைநிறுத்தத்தின் பின்னும், வேலை நிறுத்தம் செய்வதற்குக் கூட்டணிச் சங்கங்கள் தவறியதாலும் இவர்களுள் பெரும்பாலானோர் பண்டிதவின் சங்கத்திடம் தங்களுக்கிருந்த வெறுப்பை வெளிப்படையாக எடுத்துக் கூறி, இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் சேருவதற்குத் திட்டமிட்டனர்.

இந்நிலைமையினாலோ என்னவோ, மார்ச் மாத முற்பகுதியில் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் ஒருவர் சகல தொழிலாளர்களையும் அழைத்து ஸ்தாபனத்தின் வியாபார நிலைமை மோசமடைந்துள்ளதால் 'சுய விருப்பத்தின் பேரில்' தொழிலைக் கைவிட விரும்புவோருக்கு வாழ்க்கைச் செலவு உபகாரப் பணம் உட்பட ஒரு வருடச் சம்பளமும் நன்கொடையாக வழங்குவதோடு நிர்வாகத்திற்குச் செலுத்தவேண்டிய நிலுவையையும் அறவிடுவதில்லை என்றும் கூறினர்.

மேலும் தொழிலாளர்கள் அனைவரும் மார்ச் 31ம் திகதி பிற்பகல் 3. மணிக்கு முன் இராஜினாமாச் செய்தால் அவர்களுக்கு மேலதிகமாக ஒரு மாதச் சம்பளம் வழங்குவதாகவும் அறிவிக்கப்பட்டதாம்.

அவர்கள் இராஜினாமாச் செய்யாது விட்டால் அவர்களை வேலையினின்றும் ஆட்குறைப்புச் செய்வதற்குத் தொழில் இலாகாவிடம் அனுமதி கோரி ஸ்தாபனம் விண்ணப்பிக்குமெனவும் அவர்களுக்கு எவ்வித நஷ்ட ஈடும் வழங்கப்படமாட்டாதெனவும் கூறப்பட்டதாம்.

இந்த எதிர்பாராத நிலைமையை எதிர்கொண்ட தொழிலாளர்களுள் 14 பேரைத்தவிர ஏனையோர் அனைவரும் தங்களுக்குத் தொழிலாவது அல்லது நஷ்ட ஈடாவது கிடைக்காது போய்விடுமெனப் பயந்து, வழங்கப்பட்ட நஷ்ட ஈட்டைப் பெற்றுக்கொண்டு இராஜினாமாச் செய்தனர்.

ஆனால் 12 பேர் வழங்கப்பட்ட தொகையை ஏற்க மறுத்து இ. வ. ஊ. சங்கத்தில் சேர்ந்தனர்.

இவ்விடயமாக எமது சங்கம் நடவடிக்கை எடுக்கும் வரை ஐக்கிய தேயிலை றப்பர் தொழிலாளர் சங்கம் ஒன்றுமே செய்யவில்லை.

இதற்கிடையில் ஸ்தாபனம் வெளிநாட்டு ஒடர்களை ஏற்க மறுத்து, கொந்தராத்து அடிப்படையில் தேயிலையை பிளெண்ட் செய்யவும், பக்கட் பண்ணவும், ஏற்றுமதி செய்யவும் டீ

( 3ம் பக்கம் பார்க்க )

# மாணவர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிர்ப்பு

'இம்சைப் படுத்தல்' நடைபெறுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் போர்வையில் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வளாகத்தினுள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அடக்குமுறையை நிறுத்துமாறு அரசாங்கத்தைக் கோரும் அறிக்கையொன்றை இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும், புரட்சிகர மாக்ஸீயக் கட்சி (4வது அகிலத்தின் இலங்கைப் பிரிவு)யும் கூட்டாக வெளியிட்டுள்ளன.

"குற்றமொன்று புரிந்ததற்கான முறைப்பாடு ஏதேனுமிருந்தால் அதுபற்றி வழமையான முறையில் விசாரணைகளை நடாத்தலாம். வளாகத்தினுள் எங்காவது அல்லது அதன் சுற்றுப்புறத்தில் போலீஸாரை வைத்திருக்காது உடனடியாக அப்புறப்படுத்தவேண்டும்.

மாணவர் இயக்கங்களினதும், ஒவ்வொரு மாணவரினதும் ஜனநாயக உரிமைகளை மீண்டும் நிலைநாட்ட வேண்டுமென நாம் அரசாங்கத்தைக் கோருகின்றோம்"

1971 ல் பல்கலைக் கழக மாணவர் மத்தியில் பரவியிருந்த ஜனதா விமுக்திப் பெரமுனை இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைகளை அரசாங்கம் சிதறடிப்பதற்கு முன்னோடியாக பல்கலைக் கழகத்தினுள் போலீசார் புகுத்தப்பட்டதுபோல் அன்று போலீஸ் படைக்குப் பொறுப்பாயிருந்த அதே அதிகாரியின் தலைமையின் கீழ் போலீஸ் படையொன்று புகுத்தப்பட்டுள்ளதாக அக் கூட்டறிக்கையில் ஞாபகப்படுத்தப்பட்டுள்ளது. "மாணவர்கள் இன்று பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளின் இயக்கங்களில் உத்தியோகபூர்வமாக இருந்தாலும், அவர்கள் அரசியல் ரீதியில் பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளில் நம்பிக்கை இழந்து விலகிச் சென்றுகொண்டிருக்கும் சமயத்திலே அடக்குமுறை செய்யப்படுகின்றார்கள்" என்றும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

"இந் நிலைமையின் கீழ் மாணவர்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக எதிர்காலத்தில் பெரிய போராட்டங்களில் ஈடுபடுவர் என்ற ஆபத்தையிட்டு அரசாங்கம் பீதியடைந்துள்ளதால், மலேசிய அரசாங்கம் செய்ததைப்போல் மாணவர்களுக்கும் அவர்களின் சகல நடவடிக்கைகளுக்கும் எதிராக அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கலாம்" எனவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போலீசாரை அப்புறப்படுத்த வேண்டுமென்ற மாணவர்கள் கோரிக்கைக்கும், அதற்காக அவர்கள் நடாத்தும் போராட்டத்திற்கும் பூரண ஒத்துழைப்பைத்தெரிவிக்கும் அந்த அறிக்கை, அரசாங்கத்தின் இந்த அடக்குமுறையைக் கண்டிக்கும்படியும், பல்கலைக் கழக மாணவர்கள் நடாத்தி வரும் இப்போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும்படியும் மாணவர்கள் இயக்கங்கள் யாவற்றுக்கும், வெகுஜன இயக்கங்களுக்கும் மற்றும் மாணவர் பிரச்சினைகளில் உண்மையான அக்கறை கொண்டுள்ள அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தினால் கொழும்பு மாளிகா கந்தை வீதி, 130 ம் இலக்கத்தில் அமைந்துள்ள மகாபோதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org